**லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் - 2022, 2023 , 2024 (கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை – லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட் (“கம்பனி”) 2022, 2023 மற்றும் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாகவும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் சேர்த்து விதிகளில் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டியதுடன் இதற்கு மேலதிகமாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 12 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரச முயற்சிகளுக்கான செயல்வழிக் கோவையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையிலுமான ஆண்டுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம்

கம்பனியால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2014 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| **நிதிக்கூற்றுக்களின் உருப்படிகள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| சொத்துக்கள் | |
| நடைமுறைச் சொத்துக்கள் | 139,006,695 |
| | --------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **139,006,695** |
| | ========= |
| மூலதனம் மற்றும் பொறுப்பு | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கம் | 124,178,950 |
| பொறுப்புகள் | |
| நடைமுறைப் பொறுப்புகள் | 14,827,745 |
| | --------------- |
| **மொத்த பொறுப்புகள் மற்றும் மூலதனம்** | **139,006,695** |
| | ========= |
| மொத்த வருமானம் | - |
| மொத்த செலவினம் | (257,271) |
| | ----------------- |
| **பற்றாக்குறை** | **(257,271)** |
| | ========== |

**2.3 கணக்குகள் மற்றும் புத்தகங்களை பேணுதல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவம் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியால் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக காசு / வங்கிப் புத்தகம், பேரேட்டுக் கணக்கு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு, நாளேடு மற்றும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கம்பனியை நிறுவுதல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சங்கம் (SLGJA) ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் லங்கா ஜேமொலொஜிகல் லெபோரடரி எனும் டிபயரில் இந்த தனியார் கம்பனி | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் சட்டரீதியான தன்மையை பரிசோதித்து, அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

2008 மே மாதம் 29 ஆந் திகதி நிறுவப்பட்டிருந்தது. இரத்தினக் கற்கலின் பெறுமதியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பட்டைத் தீட்டுதல் மற்றும் இரத்தினக்கற்களின் கட்டமைப்பினை (Origin) தீர்மானிக்கும் வசதியை கொண்ட இரத்தினக்கல் ஆய்வுகூடமொன்று மற்றும் வெளியிடப்படும் சான்றிதழ்களுக்காக சர்வதேச அங்கீகாரமுடைய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய இரத்தினக்கல் ஆய்வுகூடமொன்றினை இலங்கையில் உருவாக்கும் நோக்கத்துடன் மேற்படி கம்பனி நிறுவப்பட்டுள்ளது.

இரசாயன ஆய்வுகூடங்களை நிறுவும் போது ஏதேனும் நபர் அல்லது அமைப்புடன் இணைந்து 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக மற்றும் அது சட்டத்திற்கு முரணாண செயலொன்றாகவும், அதற்காக ஏதேனும் தனிப்பட்ட நபருக்கு அல்லது அமைப்புக்கு பணம் விடுவிக்கப்பட்டல் சட்டரீதியான ஏற்பாடுகளை பாரிய அளவில் மீறும் நடவடிக்கையாக சட்டமா அதிபரால் 2005 ஆம் ஆண்டின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள போது, அது தொடர்பில் கருத்திற்கொள்ளாது மேற்படி கம்பனி நிறுவப்பட்டிருந்தது.

## 3.2 நிதியத்தை நிறுவுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சங்கம் (SLGJA) ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இரத்தினக்கல் ஏற்றுமதி பெறுமதியின் அடிப்படையில் அதிகாரசபையால் அறவிடப்படும் 0.25 சதவீதமான ஏற்றுமதி சேவைக் கட்டணத்திற்கு மேலதிகமாக 2001 ஆம் ஆண்டின் சனவரி முதல் மேலும் 0.25 சதவீத சேவைக் கட்டணமொன்று அதிகாரசபையின் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கட்டணத்தை அறவிடுதல் சட்டரீதியானது அல்ல என தென்படுகின்ற காரணத்தால், கம்பனிக்கு செலவு வைக்கப்பட்டுள்ள பணம் தொடர்பில் சட்ட அறிவுரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு ‘‘இரசாயன ஆய்வுகூட அபிவிருத்தி’’ நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2009 சனவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த நிதியத்திற்கு சேர்ந்த ரூபா 92,498,578.69 ஆன தொகை 2009 ஏப்ரல் 27 ஆந் திகதி லங்கா ஜெமோஜிகல் லெபோரடரி தனியார் கம்பனியின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மேலதிக சேவைக் கட்டணமொன்றை அறவிடுதல் தொடர்பில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியின் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகை மற்றும் அதற்கு உரியதாக சேர்ந்துள்ள வட்டி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் நிதியத்திற்கு மீள மாற்றப்பட்டு அந்த நிதியங்களை மாற்றி அந்த நிதியை பயன்படுத்தி உத்தேச சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் தொழில்நுட்ப ரத்ன வித்யா இரசாயன ஆய்வுகூடம் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 111 ஆம் பிரிவின் கீழ் நிறுவுவதற்கும் 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தில் அங்கீகாரம் கிடைத்து 08 வருடங்கள் கடந்துள்ள போது அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 முதல் அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கை எடுப்பதற்கு காரணம் அதற்காக LGL சபையில் கூட்டம் கூடப்பட்டு முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். LGL இல் பணிப்பாளர்களின் பெரும்பாலானோர் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சங்கத்தின் (SLGJA) ஆக காணப்படுவதுடன், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையினால் (NGJA) பெரும் கேள்வி நிலவும் போது, நிதியத்தினை அதிகாரசபைக்கு மீள மாற்றுவதற்கு அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை. அதற்கு பதிலாக அவர்கள் மறு முன்மொழிவு சமர்ப்பித்துள்ளதுடன், அதனை இரத்தினக்கல் மற்றுழ் ஆபரணங்கள் அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ள முடியாது. | மேலதிக கட்டணம் அறவிடப்படல் சட்டத்திற்கு முரணானது என்பதால், கம்பனிக்கு செலவு வைக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் சட்ட அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த விடயத்தை தீர்ப்பதற்காக அப்போது கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு சாதகமான பெறுபேறும் காணப்படவில்லை. நிதியங்கள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைக்கு மீள ஒப்படைப்பதற்கு அவர்கள் இணங்கவில்லை என்பதுடன், அதற்கு பதிலாக நிதியங்களிலிருந்து உரிமை கோரப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கம்பனி 2008 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்ட 2024 மார்ச் 31 ஆந் திகதியளவில் 15 வருடங்கள் கடந்திருந்த போதிலும், சில செயற்பாடுகள் நீங்கலாக கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்ற தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியை பேணிச் செல்லல் அல்லது பணிகளை நிறைவு செய்தல் தொடர்பில் சட்டரீதியாக தீர்மானம் எடுத்து அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 மே 16 ஆந் திகதியின் பின்னர் கம்பனியின் பணிப்பாளர் சபை கூடியிராததுடன், கம்பனியை தொடர்ந்தும் செயற்திறனாக நடாத்திச் செல்லல் அல்லது அதன் பணிகளை நிறைவு செய்வதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2025 சனவரி 07 ஆந் திகதிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கம்பனிக்கு சொந்தமான 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 76480128 ஆம் இலக்க நிலையான வைப்பில் ரூபா 251,134,797 ஆன மீதியொன்று மற்றும் 8160519 | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கு மற்றும் வைப்புகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் இலக்கமுடைய நடைமுறை கணக்கில் ரூபா 25,841,283 ஆன மீதியும் நிலவியது. எவ்வாறான போதிலும், நடைமுறைச் கணக்கிற்குரிய வங்கி கூற்றுகள் அல்லது நிலையான வைப்பிற்குரிய புதுப்பிக்கும் கட்டளைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மேற்படி நடைமுறைக் கணக்கில் நிலவிய ரூபா 25,841,283 ஆன மீதி எந்தவொரு வருமானத்தை வழங்கும் வழியில் முதலீடு செய்யப்படாது 2015 ஆம் ஆண்டு முதல் விணைவற்றுக் காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காசு மீதியை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியால் வருமான வரிக்காக பதிவு செய்திராததுடன், 2014 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக நிலவிய ரூபா 14,619,695 ஆன வருமான வரி மற்றும் ரூபா 4,784,831 ஆன நிறுத்தி வைத்தல் வரி மீதியும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் கம்பனியின் தலைவரின் மற்றும் பணிப்பாளர் ஒருவரின் தாய்லாந்து சுற்றுலாவிற்காக ரூபா 369,440 தொகையும் ஜேர்மன் சுற்றுலாவிற்காக ரூபா 1,032,887 தொகையும் 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், 2023/24 நிதியாண்டு நிறைவடைந்த போதிலும் அந்த தொகை கம்பனியால் அதிகாரசபைக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |